என்று கேட்டுக் கொள்வதோடு, விவசாயிகளும் நல்லமுறையிலே பாதுகாக்கப்பட வேண்டும். அவர்கள் சொல்லக்கூடியவைகளை யெல்லாம் இந்த அரசு பரிசீலிக்க வேண்டும். அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர் கிறேன்.

8. அறிவிப்புகள்

(அ) ரஷ்ய நாட்டிற்குச் செல்லும் அவை முன்னவருக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி. நம்முடைய பேரவை முன்னவரும், தமிழக அரசின் நிதி அமைச்சருமான மாண்புமிகு அண்ணன் மனோகரன் அவர்கள் நாளை மாலை வெளிநாடு சுற்றுப்பயணம் செல்ல இருக்கிறார்கள்.

[பிற்பகல் 1—00]

அவர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செல்வது நமக்கு ஒன்றும் புதிதானது அல்ல. அவர்கள் ஏற்கனவே பல நாடு களுக்குச் சென்றுவிட்டு பாராளுமன்ற முறைகளையும் அந்த அரசுகளின் நிர்வாக முறைகளையும் நன்கு தெரிந்து வந்திருப்பவர். ஆனால் இந்த அரசு ஏற்பட்டு அவர் பேரவை முன்னவராகவும், நிதியமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றும் வகையில் பொறுப்பேற்றிருக்கும் இந்தத் தருணத்தில் அவர்கள் வெளிநாடு செல்வது நமக்கெல்லாம் பெருமை மட்டுமல்ல, பூரிப்படையக்கூடிய ஒன்றாகும். அவர்கள் ரஷ்யத்துணைக் கண்டத்திற்கு அரசு விருந்தினராக அழைக்கப்பட்டிருக்கிறார். அந்த நாட்டு அரசு தமிழக அரசை மதித்து பேரவை முன்னவரை அழைத்திருககிறார்கள்.

ரஷ்ய நாட்டின் தேசியத் திருவிழாவாகக் கருதப்படுகிற மே தினவிழாவில், அதாவது தொழிலாளர்கள் தின விழாவில் அவர்கள் பங்கேற்று அந்த மகிழ்ச்சிகரமான நிகழ்ச்சியில் கலந்துகொள்ளச் செல்ல இருக்கிறார்கள். ஆக, நம்முடைய பேரவை முன்னவர் அவர்கள் செல்லுகின்ற நாடுகளில் எல்லாம் தமிழக அரசினுடைய சிறப்பையும், தமிழ்நாட்டின் பண்பையும், பண்பாட்டையும் எடுத்துச் சொல்வதோடு அந்த நாட்டின் அரசியல் நுணுக்கங்களையும், அந்த நாட்டின் பாராளுமன்ற

முறைகளையும் நன்றாகத் தெரிந்து கொண்டு நம்முடைய மாநிலம் பயன்படத்தக்க வகையில், ஏன் இந்தியத் துணைக் கண்டமே பயன்படத்தக்க வகையில் வருவார்கள்; அவர்களது சுற்றுப்பயணம் வெற்றிகரமாக முடியவேண்டுமென்று இப் பேரவையின் சார்பிலும், பேரவைத் தலைவர் என்ற முறை யிலும் அவரால் பல்வகையிலும் வளர்க்கப்பட்டவன் என்ற காரணத்தாலும் அவர்களுடைய பயணம் வெல்க! சிறப்புப் பெருகுக என்று கூறி தமிழகத்தின் பெருமை ஓங்க அண்ணன் வெற்றிகரமாகப் பயணத்தை முடித்து வரவேண்டுமென்று விரும்பி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, நமது அன்புக்குரிய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வெளிநாடு செல்வதைப் பற்றித் தங்களுடைய பாராட்டைத் தெரிவித்திருக் கிறீர்கள். காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நானும் தங்களோடு சேர்ந்து என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். நமது நிதியமைச்சர் அவர்கள் மிகப் பண்போடு இனிமையாகப் பழகக்கூடிய பண்பு படைத்தவர்கள். எந்த நிலையிலும் சிரித்த முகத்தோடு, இன்முகத்தோடு இருக்கக்கூடிய ஒருவர். அவர்கள் நமது தமிழ் நாட்டின் பிரதிநிதியாக ரஷ்ய நாட்டுக்கும், செக்கோஸ்லோவாக்கியா போன்ற கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும், அடுத்து லண்டன், பாரிஸ், ரோம், வாடிகன் முதலிய இடங்களுக்கும் சென்று திரும்ப இருக்கிறார்கள். அவர்களுடைய பயணம் இனிமையாக அமைந்து நல்ல மகிழ்ச்சியோடு சுற்றுப் பயணம் அமைய வேண்டுமென்று என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு ஒரு மகிழ்ச்சி—ரஷ்ய நாட்டுக்கு அவர் செல்வதில். உலகத்திலேயே எடுத்துக்காட்டாக சமத்துவத்தை, வேலை செய்யாமல் யாரும் இருக்கக்கூடாது என்ற நியதியை ஏற்படுத்தி யிருக்கக்கூடிய ஒரு நாட்டிலேயே, வறுமையே இல்லையென்பதை நிரூபித்துக் காட்டிய நாட்டிலே நமது நிதியமைச்சர் அவர்கள் அடியெடுத்து வைக்க இருக்கிறார்கள். அவர்கள் இதற்கு முன்னாலும் போயிருப்பார்கள். ரஷ்ய நாடு வளர்ந்து கொண்டே வருகிறது. அன்றாடம் அந்த மக்களுடைய எண்ணங்களையும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு எம்மாதிரியான திட்டங் களை அவர்கள் போடுகிறார்கள் என்பதைப் பற்றியெல்லாம் நீங்கள் அறிந்துகொள்ள முயற்சிப்பீர்கள் என்று நம்புகிறேன். நான் கம்யூனிச தத்துவத்தில் ரொம்ப நம்பிக்கையுள்ளவன் என்ற முறையில்—தத்துவத்தில்தான், கம்யூனிஸ்ட் கட்சியில் அல்ல—கூறுகிறேன். மார்க்சிய தத்துவத்தில் நான் ரொம்ப நம்பிக்கையுள்ளவன். அந்த முறையில் அந்த மார்க்சீய தத்துவம்

1979 ஏப்ரல் 26] *[திரு. ஏ. ஆர். மாரிமுத்து]*

அங்கே எப்படி நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கிறது என்பதை நீங்கள் அறிந்து கொள்வது, நீங்கள் இங்கே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கிற காரணத்தினாலும் அமைச்சரவையின் ஒரு உறுப்பினராக இருக்கிற காரணத்தினாலும் அது தமிழகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும். மற்றும் ஜனநாயக முறையை அங்கே எப்படி அமல்படுத்தியிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்வதும் பயனுள்ளதாக இருக்கும். நம்முடைய பாராளுமன்ற ஜனநாயக அமைப்பு முறையை நடத்திவருகிறோம். அங்கே இருக்கின்ற பாராளுமன்ற அமைப்புகளிலே இருப்பது ஜனநாயகம் இல்லை என்று இங்கே சிலர் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம். என்னுடைய சொந்த அபிப்ராயம்—அங்கேயும் ஜனநாயக அமைப்புத்தான் இருக்கிறது என்பது என்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை. ஆகவே அங்கே ஜனநாயக முறை எப்படிச் செயல்படுகிறது என்று அவர்கள் புரிந்துகொண்டால் அது நாட்டிற்கும் மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் அதைப்போலவே செக்கோஸ்லாவாக்கியா நாடும் அதைப்போன்ற ஒரு அமைப்பு உள்ள நாடுதான். அங்கேயும் அவர்கள் போகிறார்கள். பிறகு இலண்டனுக்கும் அவர்கள் போகிறார்கள். அது காமன்வெல்த் பார்லிமென்ட் நாடுகளிலே ஒரு நாடாகும். பாராளுமன்றத்தின் தாயகமாக இருக்கக்கூடிய நாடு. அங்கே ஏற்கனவே நீங்கள் பாராளுமன்ற உறுப்பினர் என்ற முறையிலே போய்ப் பார்த்து இருக்கலாம். இப்போது தாங்கள் செல்கிறபோது அங்கே எப்படி பாராளுமன்ற அமைப்பு முறையின் சிந்தனைகள் இருக்கின்றன? எப்படி வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பதையெல்லாம் தெரிந்துகொண்டு வந்து அந்தக் கருத்தோட்டங்களையும் இங்கே பயன்படுத்துவதற்கு வாய்ப்பு ஏற்படும். பிறகு பாரிஸ், ரோம் போன்ற இடங்களுக்குத் தாங்கள் சென்றுவிட்டு வேட்டிகன் நகருக்கும் போக இருக்கிறீர்கள். வேட்டிகன் நகரத்திலே போப் ஆண்டவரைப் பார்க்க இருக்கிறீர்கள். கடைசியாக போப் ஆண்டவரைப் பார்த்துவிட்டு ஊருக்குத் திரும்பப் போகிறீர்கள். இவைகளையெல்லாம் பார்த்து தமிழ் நாட்டிற்கு அவைகளைச் செயல்படுத்துகின்ற முறையிலே உணர்ந்து வெற்றிகரமாக திரும்பி வந்து உங்களுடைய எண்ணங்களைச் செயல்படுத்துவதற்கும் தாங்கள் முயற்சிக்க வேண்டுமென்று வாழ்த்தி உங்கள் சுற்றுப்பயணம் மகிழ்ச்சியாக, வெற்றிகரமாக அமையவேண்டுமென்று மறுமுறையும் வாழ்த்தி அமைகிறேன்.

திரு. என். சங்கரய்யா: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் சட்டமன்றப் பேரவையின் முன்னவரும் தமிழக அரசினுடைய நிதியமைச்சருமாகிய என்னுடைய பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு நண்பர் மனோகரன் அவர்கள் நாளை மாலை சோவியத் யூனியனுக்கும் செக்கோஸ்லவாக்கியாவிற்கும் இன்னும்

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 26

ஐரோப்பாவிலே உள்ள சில நாடுகளுக்கும் சென்றுவர இருக்கிறார் என்ற செய்தி கேட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நண்பர் மனோகரனுடைய சுற்றுப்பயணம் செம்மையாகவும் சிறப்பாகவும் பயன் உள்ளதாகவும் அமையவேண்டுமென்று என்னுடைய கட்சியின் சார்பிலே அவருடைய சுற்றுப்பயணத்திற்கும், அவருக்கும் எங்கள் நல்வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நண்பர் திரு. மாரிமுத்து அவர்கள் குறிப்பிட்டதைப் போல் தாங்கள் இப்போது குறிப்பிட்டதற்குப் பிறகுதான் எனக்குத் தெரியும், சோவியத் யூனியனுக்குச் சென்றுவர இருக்கிறார் என்றும், அவர்கள் இப்போது நடைபெற இருக்கிற உலகத் தொழிலாளர் தினமாகிய மே தினத்திலே பங்குகொள்ளப் போகிறார்கள் என்பது அவர்கள் சொன்னதற்குப் பிறகுதான் தெரியும். சோவியத் யூனியன், திரு. மனோகரன் அவர்களைத் தங்களுடைய அரசாங்கத்தின் சார்பாக அங்கே அழைத்து இருக்கிறார்கள் என்பது தமிழ் நாட்டிலே உள்ள மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கக்கூடிய ஒன்று என்று நான் கருதுகிறேன். குறிப்பாக, மே தினத்திலே ஏகாதிபத்தியத்தை எதிர்த்தும் ஏகபோக முதலாளித்துவத்தை எதிர்த்தும் உழைப்பாளி மக்களின் பரிபூரணமான விடுதலைக்காக போராடிக்கொண்டிருக்கிற அந்த மே தின வரலாறு உலக வரலாற்றின் மிகச் சிறந்த தினமாகும். உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் வந்து இருக்கக்கூடிய உழைப்பாளி மக்களோடு சேர்ந்து நண்பர் மனோகரன் அவர்கள் மே தினத்திலே பங்கெடுத்துக் கொள்வது நமக்குப் பெருமையளிக்கிறது. மாமேதை லெனினுடைய தலைமையிலே 1917 ஆம் ஆண்டிலே போல்ஷ்விக் கட்சி சமுதாயப் புரட்சியை நடத்தி அன்றைக்கு அந்த நாட்டிலே ஏகபோக மூலதனங்களோ, நிலப்பிரபுத்துவமோ, வட்டிக் கொடுமையோ இல்லாத ஒரு அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நண்பர் மனோகரன் அவர்கள் நேரிலே பார்க்கமுடியும். கூட்டுப் பண்ணை விவசாயத்தை நடத்தமுடியுமா, தனியார்தான் விவசாயத்தை நடத்தமுடியும் என்று சொல்லிக்கொண்டிருக்கிற ஒரு நாட்டிலே எவ்வாறு கூட்டுப் பண்ணைகள் என்பது விரிவடைந்து சமுதாய இயக்கங்களாக நடைபெற்று விவசாய உற்பத்தியைப் பெருக்கி, கூட்டுப் பண்ணையைச் சேர்ந்த விவசாயிகளுக்கும் வருமானத்தை அதிகரித்து இருக்கிறது என்பதையும் தெளிவாகப் பார்க்கமுடியும்.

(பிற்பகல் 1-10)

தொழிலாளர்களுக்கே உரித்தான, அந்த நாட்டினுடைய எல்லா தொழிற்சாலைகளும் எல்லா நிலங்களும் ஒப்படைக்கப்பட்டு, சொத்தாக்கப்பட்ட ஒரு நாட்டில் எவ்வாறு உற்பத்தியானது வரவர அதிகரித்துக் கொண்டே இருக்கிறது என்பதையும் அவர்கள் பார்க்க முடியும்.

1979 ஏப்ரல் 26]		[திரு. என். சங்கரய்யா]

விலைவாசி உயர்வைப் பொறுத்தவரையில் சோவியத் யூனியனும் மற்ற நாடுகளும் எவ்வளவு கட்டுப்பாடாக 20 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அதே விலைவாசி நிலவரத்தைத் தான் இன்றைக்கும் வைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் நேரிலே அறியமுடியும். அதிலும் குறிப்பாக, ஆசியா கண்டத்தைச் சேர்ந்த பல கிழக்கு நாடுகளும் சோவியத் சோஷலிச ஒன்றியத்திலே அடங்கியிருக்கின்றன. அந்த நாடுகள் மிகவும் பின்னடைந்த நிலைமையிலே, இந்தியா போன்ற நிலைமையிலே இருந்த நாடுகள் எல்லாம் சோஷலிசம் என்ற அமைப்பின் காரணமாக சிறப்பாக மாறியிருப்பதையும் அவர்கள் பார்ப்பார்கள் என்று கருதுகிறேன். இதர சோவியத் யூனியனிலேயுள்ள ஆசிய குடியரசுகளுக்கும் அவர்கள் சென்றுவர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், செக்கோஸ்லோவாக்கியா என்ற சோஷலிச நாடும் சமீபத்திலே விடுதலை அடைந்து மாபெரும் முன்னேற்றங்களை அடைந்திருக்கிறது. அதேபோல், ஐரோப்பாவிலேயுள்ள மற்ற நாடுகளும் சிறப்பான ஒரு வளர்ச்சியையும் சரித்திரத்தையும் கொண்ட நாடுகள். இந்த சோஷலிச நாடுகளுக்கும் மற்ற நாடுகளுக்கும் அவர் செல்லக்கூடிய இந்தக் காரியமானது அவருக்கும் சிறப்பாகப் பயன்படும், தமிழ்நாடு அரசாங்கத்திற்கும் அது பயன்படும் என்று கருதுகிறேன்.

'சோஷியல் செக்யூரிட்டி' என்ற சமுதாயப் பாதுகாப்பு, உழைக்கும் மக்களுக்கு எவ்வாறு சோவியத் யூனியனிலும், சோஷலிச நாடுகளிலும் அமுலில் இருக்கிறது என்பதை மாண்புமிகு மனோகரன் அவர்கள் ஊன்றி கவனித்து வந்தால், இன்று தமிழ்நாட்டிலேயும் அப்படிப்பட்ட உழைப்பாளி மக்களுக்கு அந்தச் சமுதாய பாதுகாப்பு கொடுக்க நாம் என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஒரு பேருதவியாக இருக்கும் என் கருதுகிறேன்.

ஆகவே, ஒரு நீண்ட சட்டமன்றப் பேரவையினுடைய கூட்டத் தொடர் முடிந்து, பல பிரச்னைகளிலே, நாம் எதிரும் புதிருமாக இருந்து மோதிக்கொண்டாலும், இன்றைக்குத் தமிழ் நாட்டு மக்களின் சார்பிலேதான் நாம் அப்படிப்பட்ட அரசியல் பணிகளிலே இறங்க வேண்டியிருக்கிறது என்பதை ஞாபகத்திலே வைத்து, இதனுடைய இறுதிக் கட்டத்திலே, இன்றைக்கு இந்தக் கூட்டத் தொடரினுடைய இறுதிக் கட்டத்திலே, மாண்புமிகு மனோகரன் அவர்கள் அந்தச் சுற்றுப்பயணம் செய்வது எல்லா வகையிலும் அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அந்தச் சுற்றுப் பயண

[திரு. என். சங்கரய்யா] [1979 ஏப்ரல் 26

தின் விளைவாக தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்ல பல செய்திகளை அவர் தெரிவிக்க முடியும். அரசாங்கத்திற்கும் பல காரியங்களைச் செய்வதற்கு, மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்வதற்கு அது உதவியளிக்கும் என்ற முறையிலே, அவருடைய அந்தச் சுற்றுப் பயணத்தை மீண்டும் வாழ்த்தி, அவருடைய சுற்றுப் பயணம் இனிதாக, சிறப்பாக அமைய வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி அமர்கிறேன், வணக்கம்.

(ஆ) பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீலங்கா அரசு கிராம தொழில்துறை அமைச்சர் திரு. தொண்டை மானுக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்ரீலங்கா அரசின் கிராமத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு தொண்டைமான் அவர்கள் இன்றையதினம் பார்வையாளர் மாடத்திலே இருந்து நம்முடைய மன்ற நடவடிக்கையை கவனிக்கிறார். அவருக்கு நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். (பலத்த ஆரவாரம்)

(அ) ரஷ்ய நாட்டிற்குச் செல்லும் அவை முன்னவருக்குப் பாராட்டு. (தொடர்ச்சி)

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நமது அருமைக்குரிய நாஞ்சில் மனோகரன் அவர்கள் நாளையதினம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற் கொள்ள இருக்கின்றார்கள். அதற்காக அன்னாரை வழி அனுப்புகின்ற முறையில், நாம் இங்கே ஆசிகூறி வழி அனுப்ப கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு முன்னதாக அருமை நண்பர்கள் சிறப்பான பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். கடந்த இரண்டு மாத காலமாக, இந்த அவையில் பல்வேறு கருத்துக்களில் அரசோடு நாங்கள் மோதி, இன்றைய தினம் அவற்றையெல்லாம் மறந்து நம்மில் ஒருவராக நாஞ்சில் மனோகரன் அவர்கள் வெளிநாடு செல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிகின்றபொழுது, நிச்சயமாக இந்த அவையில் இருக்கின்ற அனைவரையும் விட நாங்கள் அதிக மகிழ்ச்சி அடைவோம் என்பதை இங்கே கூறாமலே, நீங்கள் அறிவீர்கள்.

எங்கள் மாவட்டத்திற்குச் சொந்தமானவரும்கூட (சிரிப்பு), எங்களில் ஒருவராகவும் இருக்கிறவர். ஒரு வேளை அவர் வெளிப்படையாக அதனை இந்த நாடு அறிந்துகொள்ளக் கூடாது என்று பல்வேறு சமயங்களில் முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட அந்த எண்ணம் அவருக்கு இருக்கிறது